# அறிவுச் சுரங்கத்தில் அர்ச்சிராதிகதி

புதுக்ரஹாரம் எஸ். வாஸுதேவன், பெங்களூரு

எம்பெருமான் ஸ்ருஷ்டித்துக் காத்தழிக்கும் இவ்வையத்தில், நாம் எல்லோரும் காணும்படியாக நிலப்பரப்பின் மேல் குவிந்துகிடக்கும் செல்வம் பல. மேலும் பல செல்வங்கள் தாதுப்பொருட்களாக, நம் கண்ணுக்கு இலக்காகாமல், பூமியில் புதைந்து கிடக்கின்றன. அத்தாதுப்பொருட்களை, அவைகளின் தன்மையறிந்தோர், அவைகள் புதைந்து கிடக்கும் இடத்தை ஆராய்ந்து, அவற்றுடன் சேர்ந்த பல கழிவுப் பொருட்களை விலக்கித் தனித்துப் பிரித்து எடுப்பர்; இவ்வாறு பூமியின் அடியில் ஆழந்து கிடக்கும் தாதுக்கள் கிடைக்கும் இடத்தை **சுரங்கம்** என்றழைப்பர். அப்படிப் பிரித்தெடுத்ததில், வெகுஜனங்கள் அறிந்தும், நேராகப் பயன்படுத்தும் தங்கம், வைரம் முதலிய பொருட்களும், அவர்கள் அறியாமல், ஆனால் பயன்படுத்தும் பல பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான மூலப் பொருட்களும் அடங்கும். ஆனால், சில காலங்களுக்குப் பின், அக்கனிமங்கள் தீர்ந்து, கிடைக்காமல் போகும்.

**அழியாச் செல்வம்; அறிவுச் சுரங்கம்**

ஒருவன் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கும் செல்வம், நல்ல நூற்களைக் கற்றறிந்ததால் உண்டான அறிவேயாம். அத்தகு கல்வியின் பெருமையைச் சொல்ல வந்த நாலடியார் என்னும் தமிழ்நூல்,

> **இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்**
> **தம்மை விளக்குமால், தாம் உளராக் கேடின்றால்**
> **எம்மை உலகத்தும் யாம் காணோம்; கல்விபோல்**
> **மம்மர் அறுக்கும் மருந்து.**

(கல்விச்செல்வமானது, இப்பிறவிப் பயனாகிற உறுதிப்பொருளை அளித்தும், மற்றைச் செல்வங்கள் போல் பிறர்க்குக் கொடுப்பதால் குறைவுபடாமல் தான் மிக வளர்ந்தும், கற்றவன் பெருமையை வெகுதொலைவிற்கு அறியச்செய்தும், வாழும்வரை அழிவின்றியும், அறியாமையை அழிக்கும் எங்கும் காணப்படாத மருந்தாக விளங்குகிறது) என உரைக்கும்.

ஒருவனுக்கு பொன், மணி போன்ற நிலையில்லாச் செல்வங்களிலும் சிறந்த, அழிவில்லாச் செல்வமான இக்கல்விச் செல்வமானது, **தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு** என்று பொய்யாமொழியின்படி, எவ்வாறு சிறுகுளங்களில் தோண்டத் தோண்டத் தண்ணீர் பெருகுமோ, அவ்வாறே கற்ற அளவின் அறிவு மேம்படும் என்பதாம். ஆனாலும் பொய்யில்புலவர், நல்லூழ் காலத்தில் சிறக்கும் இப்பண்பு, அல்லாக் காலத்தில், இயற்கையான விதியறிவானது செயற்கையறிவாம் கல்வியறிவை முறப்பட்டுச் செயலாக்கும் என்பதை, **நுண்ணிய பலநூல் கற்பினு மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்** என்றார். ஆதலால், இக்கல்வியறிவு நிலப்பரப்பின் மேல் காணப்படும் நிலையில்லாச் செல்வங்களை ஒத்ததாம்.

கல்வியையும் சில நேரங்களில் மிகுந்து நிற்கும் ஊழின் வலிமையையும் மாற்றவல்லவனைப் படைக்கும் (மார்க்கண்டேயர் வரலாறு) பரமனின் மூச்சுக்காற்றாம் மறை எனப்படும் வேதத்தை அறிய உதவும் பதினெட்டு வித்யாஸ்தானங்களாகிற கல்விகள் சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படும் தங்கம், வைரம் போன்றவை. தங்கம் போன்றவை அத்தொழில் நுட்பம் அறிந்தவர்தம் முயற்சியால் எல்லா மக்களின் அனுபவத்திற்கு அளிக்கப்படுவதுபோல், பதினெட்டு கல்விகள் ருஷிகளாலும், சான்றோர்களாலும் வேதத்தை அகழ்ந்து எடுத்து உலகிற்கு அளிக்கப்படுவதாம்.

அத்தகு வித்யாஸ்தானங்கள் முழுவதும் அறிந்தாலும் அவைகள் சுமையான கல்விகளே என உரைக்கும் நம் வேதாந்தாசிரியர், மேலும், வஸ்துக்களுக்கு ஸ்வரூபத்தையும், வாழ்வையும் கொடுத்து, அவற்றைத் தாங்கும் இறையாயும், தனக்கு அடிமையில்லாப் பொருள் ஏதுமின்றியும், தனக்கு எதுவும் நிகரின்றியும் விளங்கும் ஶ்ரிய:பதியான எம்பெருமானுக்கும், சேதநாசேதநங்களுக்குமுள்ள ஶரீராத்மபாவமே வேதாந்தத்தை அறிந்த பெரியோர்களின் ஸத்யமான ஸித்தாந்தம் என்னும் பொருள்பட,

**நிலை தந்த தாரகனாய் நியமிக்கும் இறைவனுமாய்**
**இலது ஒன்று எனா வகை எல்லாம் தனது எனும் எந்தையுமாய்த்**
**துலை ஒன்று இல்லை என நின்ற துழாய் முடியான் உடம்பாய்**
**விலையின்றி நாம் அடியோம் எனும் வேதியர் மெய்ப் பொருளே.**

என்றருளினார். எனினும், அவ்வேதாந்த விழுமியத்தை வகையாக அறிய உதவுவது வித்யாஸ்தானங்களும், நம் பெரியோர்களின் கலக்கமற்ற பாடங்களும், அவைகளின் உரைகளுமேயாகும். பூமிக்கடியில் மறைந்திருக்கும் கனிம வளத்தைக் கண்டெடுப்பதுபோல், மறையின் மறைப்பொருளை அகழ்ந்தெடுத்து நமக்களித்த நம் மூதாதையர்களின் அழியாச் செல்வங்களைக் காக்கவும், அவற்றைக் காலத்திற்கேற்ப நவீன முறையில் வகையாகத் தொகுத்து வருங்கால சந்ததியினரும் உபயோகப்படுத்தவும் **நம் சோகத்தூர் ராமானுஜாசார்யர் ஸ்வாமி ஶ்ரீபராங்குஶாசார்ய வைதிக அத்யயன ஸம்ஸ்தை** என்னும் நிறுவனத்திற்கு இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் வித்திட்டார். அது பல்லாண்டுகளில் இளம் ஆலமாய் சில விழுதுகளுடன் வளர்ந்து வருகிறது.

**அமைந்த திருநாமமும், அறிவித்த குமரனும்**

நம் ஸம்ப்ரதாயத்தில், பெரும்பாலும் பெருமாள் ஆசார்யர்களின் திருநாமங்களையே குழந்தைகளுக்கு இட்டும், அழைத்தும் வருகிறோம். ஆனாலும், தங்கள் நாமங்களின் சிறப்பை அறிந்தோ, அதன் குணத்தில் ஈடுபட்டோ வாழ்ந்தும், வாழ்பவரும் வெகுசிலரே. நம்மாழ்வார் திருவிருத்தத்தில், 'ஈனச்சொல்லாயினுமாக' எனத் தொடங்கி, ஶ்ரீபராங்குஶாசார்யரான காலத்தில், **மற்றெல்லாயவர்க்கும் ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே** எனத் தம் மதத்தை வெளியிட்டருளினார் என அனுபவித்தனர் நம் பூர்வர். அதே திருவிருத்தத்தில், நிலத்தேவர்களான ப்ராஹ்மணர்கள் இருக்குவேதத்தால் முறையாக பல ஸூக்தங்களால் எம்பெருமானைத் தொழ, தம் வினையால் அத்தகு தகுதி பெறாமை குறித்து வருந்தி, ஆயினும் தன் வர்ணாஶ்ரமத்திற்கு ஏற்றவாறு எம்பெருமானை அனுபவிக்கும் நாமங்களைச் சொல்லி, **இருக்கார் மொழியால் நெறியிழுக்காமை, உலகளந்த திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர், யாமும் அவா ஒருக்கா வினையொடும் எம்மொடும் நொந்து கனியின்மையின் கருக்காய் கடிப்பவர் போல், திரு நாமச்சொல் கற்றனமே** என கனியிருக்கக் காய் அனுபவிப்பது போல் அனுபவிக்கிறார். ஆழ்வாரின், பராங்குஶ திருநாமம் சாற்றப்பட்ட நம் ப்ராசார்யரும், தாம் கொண்ட வர்ணாஶ்ரம தர்மத்தின்படி வேதத்தை பயிற்றுவிக்கும் நேரத்தில், அதற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் ஸம்பவங்கள் நிகழ்ந்தபோது, தம் தர்மத்தைக் கைவிடாது, உத்யோகத்தை உதறினார் என நாம் அறியும்போது, வெறும் நாமத்தைச் சான்றோர் தம் நடத்தையால் திருநாமமாக்குவதை உணர்கிறோம்.

திருக்காஞ்சியில் அநுஷ்டான காலக்ஷேபத்துடன் பேரருளானை அனுபவித்துக்கொண்டு எழுந்தருளியிருந்த நம் வேதாந்தாசார்யர் வறுமையில் வாடுவதாக எண்ணிய அவரின் பால்ய நண்பனான விஜயநகரத்து மந்த்ரியின் ராஜாங்க அழைப்பை, கண்ணனெனும் உண்மைச் செல்வமிருக்க மற்றவை இழிவான செல்வம் எனச் சொல்லி நிராகரித்ததையும், அந்த வைராக்யத்தை வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்ததையும் இவ்வையம் அறியும். நம் ப்ராசார்யரும் தாம் எடுத்த முடிவு உணர்ச்சிவஶப்பட்டதொன்று என்று எண்ணி பின்னாட்களில் அதை மாற்றிக் கொள்ளாமல், தம் குடும்பத்தை எம்பெருமான் அருள் காக்கும்

எனும் வைராக்யத்துடன் எழுந்தருளி இருந்ததைக் கண்டார் பலரும் உளர்.

சென்ற நூற்றாண்டின் நடுவில் ஒரு சிலரே, **பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச** என்றவாறு தந்தையை ஜ்ஞானாசிரியனாய்க் கொண்ட பாக்யம் பெற்றனர். அவர்களுக்குள்ளே தம் மகனை **அவையத்து முந்தியிருப்பச்** செய்த தந்தையும், **இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்**லை உலகோர் உரைக்க வைத்த மகனும் மிகச்சிலரே. ஆழ்வாரின் வர்ணாஶ்ரம தர்மநிலைப்பாட்டையும், ஸ்வாமி தேஶிகனின் வைராக்யத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த ப்ராசார்யரான பிதாவும், தம்முடைய முயற்சிக்குத் தம் ஜ்ஞானாசிரியனானத் தந்தையின் திருநாமத்தைச் சூட்டிய நம் ஆசார்யரும் நாம் பெற்ற அழியாச் செல்வங்களே. **ஶ்ரீபராங்குஶாசார்ய வைதிக அத்யயன ஸம்ஸ்தை** என்னும் இந்த அழியா அறிவச்சுரங்கத்தின் இருபத்தியைந்தாம் ஆண்டு சிறப்பு மலரில் ப்ராசார்யரின் வைபவத்தில் ஒரு துளியை அனுபவிக்கும் பாக்யம் பெற்றோம். இச்சிறப்பு மலரில் ஸ்வாமியின் ஆஜ்ஞையைச் சிரமேற்கொண்டு, அடியேன் ஆசார்யரிடத்தில் ஶ்ரீஎம்பெருமானார் அருளிச்செய்த வேதாந்ததீப க்ரந்தத்தில் பயின்றதில் யதாஶக்தி, யதாமதி கொண்டு ஸமர்ப்பிக்கிறேன்.

**அர்ச்சிராதிகதி**

வேதாந்ததீபத்தில் மூன்றாம் அத்யாயத்தில் மூன்றாம் பாதத்தில் அர்ச்சிராதிகதி பற்றிய அநியமாதிகரணம் இக்கட்டுரையின் விஷயமாகிறது. ஒரே ஸூத்ரத்தைக் கொண்ட இவ்வதிகரணம் நம்மில் பெரும்பாலோர் அறிந்த அர்ச்சிராதிமார்கத்தைப் பற்றிய ஆக்ஷேபங்களும், ஸித்தாந்தமும் அடங்கியது.

अनियमाधिकरणम् - அநியமாதிகரணம்

सू - अनियमस्सर्वेषामविरोधश्शब्दानुमानाभ्याम् ।

அநியம: ஸர்வேஷாம் அவிரோத: ஶப்தானுமாநாப்யாம்

**ஸூத்ரார்த்தம்: ஸர்வேஷாம்** - எல்லா உபாஸகர்களுக்கும் (அர்ச்சிராதிகதியுண்டு), **அநியம**: - (சிலர்க்கு உண்டு சிலர்க்கில்லை என்ற) நியமமில்லை. **ஶப்தானுமாநாப்யாம்** - (இப்படிச் சொன்னால்தான்) ஶ்ருதிஸ்ம்ருதிகளோடு, **அவிரோத**: - விரோதமில்லை.

இந்த ஸூத்ரம் மூன்றாம் அத்யாயம், மூன்றாம் பாதத்தில், பதிமூன்றாம் அதிகரணமான அநியமாதிகரணத்தில் காணப்படுகிறது.

நான்கு அத்யாயங்களை உடையதான ஶாரீரகமீமாம்ஸை என்னும் இந்த ஶாஸ்த்ரம், ஸித்த த்விகம் என ஸித்தமாக இருக்கும் ப்ரஹ்மத்தைப்பற்றி முதல் இரண்டு அத்யாயங்களாயும், ஸாத்ய த்விகம் என நாம் அந்த ப்ரஹ்மத்தை அடைய (மோக்ஷத்தையடைய) ஸாதிக்க வேண்டியதான உபாயம், மற்றும் அதன் பலன் என பின் இரண்டு அத்யாயங்களாயும் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரணத்தையுடையதான மூன்றாம் அத்யாயம், மோக்ஷபலனுக்கு செய்ய வேண்டியதான உபாயங்களை விசாரிப்பதால், ஸாதன (உபாயம்) அத்யாயம் என அறியப்படுகிறது.

இதன், முதல் பாதமான **வைராக்யபாதம்**, மோக்ஷத்தை அடைய விரும்பும் ஜீவன்கள் தங்களின் தோஷங்களை அறிவதன் மூலம் அவற்றைத் தவிர்த்து முக்தியடைய வைராக்யம் பிறக்கைக்காக, ஜீவன்களின் தோஷங்களை விளக்குகிறது. இரண்டாம் பாதமான **உபயலிங்க பாதம்**, அத்தகு மோக்ஷத்தை அளிக்கவல்ல ப்ரஹ்மத்திடம் உபாஸகனுக்கு விருப்பம் பிறப்பதற்காக, அந்த ப்ரஹ்மம், தோஷமற்ற தன்மை, கல்யாணகுணங்களையே உடைமை என உபயலிங்க(இரு அடையாள)ங்களால் அறியப்படுகிறது என்பதை விளக்குகிறது.

இனி மூன்றாம்பாதம், குணங்களைச் சேர்த்துக்கொள்ளுதல் எனும் பொருள்பட **குண உபஸம்ஹார பாதம்** என அறியப்படும். வேதத்தில் ஒரு வித்யையே பல ஶாகைகளில் சொல்லப்பட்டிருக்கும்; அப்படி ஒரு ஶாகையில் சொல்லப்பட்ட ஒரு வித்யையின் குணங்களை மற்றையவைகளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என இதனால் அறியலாம்.

குணங்களை சேர்த்துக்கொள்வது பற்றியதான வெவ்வேறு வகையில் விசாரிக்கப் பட்டவைதான் இந்தப்பாதத்தில் வெகுவாக உள்ளது. இந்த அதிகரணத்திற்கு முதல் அதிகரணமான **ஸாம்பராயாதிகரணத்தில், தேவயானம் என்னும் அர்ச்சிராதிமார்க்கம்** பற்றியும் விசாரிக்கப்பட்டது. ஸாம்பராயமாவது கடைசியாக உடலை விடுவது. रोमाणि विधूय, धूत्वा शरीरं - பாபத்தை உதறிவிட்டு, ஶரீரத்தையும் விட்டு என்ற வாக்யம் உடலை விடும்போது பாபங்களை விடுவதைச் சொல்லும். स आगच्छति विरजां नदीं । तत्सुकृतदुष्कृते धूनुते - விரஜை என்ற நதிக்கு வந்து சேருகிறான், புண்யபாபங்களை விடுகிறான் என்ற வாக்யம் வழியில் பாபங்களை விடுவதைச் சொல்லும். கர்மாவினால்தான் ஶரீரம் உண்டாகிறது; முதல் வாக்யத்தின்படி, தேஹத்தை விடும்போது, எல்லாக் கர்மாக்களையும் விட்டால் விரஜையை அடைய ஸூக்ஷ்ம ஶரீரம் எடுக்க முடியாது; ஆதலால், தேஹத்தை விடும்போது சில கர்மங்களையும், சிலவற்றைப் பின்னுமாக இருவகையாக விடுவதென்று பொருள் கொண்டால்தான் அர்ச்சிராதிமார்க்கத்தினால் செல்கிறான் என்ற வாக்யம் அர்த்தம் உடைத்தாகும்; அர்ச்சிராதிமார்கத்திற்குச் செல்வதற்குத் தேவையான கர்மா மீதமின்றி, ஸூக்ஷ்மஶரீரத்திற்கு வேண்டுவதான கர்மாவும் முன்னமே கழிந்துவிட்டதென்றால், இவன் அந்த மார்க்கத்தில் செல்லமுடியாது; ஆகையால் தேவயானம் சொன்ன ஶ்ருதி வாக்யத்துடன் முரண்படுமே என்றான் பூர்வபக்ஷி.

ஸித்தாந்தமாக, கர்மாக்களை உதறியபின்னும், வித்யையானது தன் பலனான ப்ரஹ்ம ப்ராப்தியைக் கொடுப்பதன் மூலம், தேவையான வழியில் இவன் செல்வதற்காக ஸூக்ஷ்மஶரீரத்தை நிலைநிறுத்துகிறது என்பதை स स्वराड्भवति तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति - கர்மவஶ்யனாகாமல் ஸ்வராட்டாகிறான், ஸர்வலோகங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சரிக்கிறான் போன்ற வாக்யங்களாலும், இவ்வுலகில் அரசனை அண்டியவனுக்கு அவன் விரும்பியதற்கும் மேலான பொருட்கள் கிடைக்கின்றனவே; ஆகவே, ஸர்வஜ்ஞனாய் ஸத்யஸங்கல்பனான பிரானை உபாஸிப்பவனுக்கு எல்லாம் கூடும் என்பதாலும் நிரூபிக்கப்பட்டது.

இனி, இந்த அநியமாதிகரணத்தில் சொல்லப்பட்ட அர்ச்சிராதிகதி பற்றி சற்றே விரிவாக அனுபவிப்போம். ஸ்வாமிதேஶிகன், இந்த அதிகரணத்திற்கு அதிகரணஸாராவளியில் மூன்று ஶ்லோகங்களை ஸாதித்துள்ளார். முதல் ஶ்லோக சிந்தாமணி வ்யாக்யானத்தில் ஸ்வாமி ஸ்ரீகுமாரவரதாசார்யர், முந்தைய அதிகரணங்களான ஹாந்யதிகரணத்தில், உபாஸகன் புண்ய பாபங்களை விடுவது எங்கு என்பதும், ஸாம்பராயாதிகரணத்தில் எப்போது அவற்றை விடுகிறான் என்பதும் தெளிவாக்கப்பட்டது; இந்த அதிகரணத்தில், முன்பு சொல்லப்பட்ட அர்ச்சிராதிமார்க்கம், எந்த வித்யையில் அந்த மார்க்கத்தைப் பற்றினது சொல்லப்பட்டதோ, அந்த வித்யையில் இழிந்தவர்களுக்கு மட்டுமா அல்லது பிற ப்ரஹ்ம வித்யையில் இழிந்த எல்லோருக்குமா என்பது விசாரிக்கப்படுகிறது என்று ஸங்கதி அருளுகிறார்.

इतरेषां तया ब्रह्मप्राप्तौ प्रमाणाभावात् । तन्निष्ठानामेवेति पूर्वः पक्षः । - **மற்றவர்க்கும் அதே மார்க்கம் என்பதற்கு ப்ரமாணம் இல்லையாகையாலே, அந்த கதி சொல்லப்பட்ட வித்யையில் இழிந்தவர்களுக்கு மட்டுமே என்பது பூர்வபக்ஷம்.** பஞ்சாக்னி, உபகோஸல, தஹர வித்யைகளில் அர்ச்சிராதிகதி சொல்லப்பட்டு இருக்கிறது. பிற வித்யைகளில் காணக்கிடைக்க வில்லை. பஞ்சாக்னிவித்யையில், य एवमेतद्विदुः ये चेमे अरण्ये श्रद्धां सत्यमुपासते तेऽर्चिषमभिसंभवन्ति । - **இதனை எவர் அறிந்துளரோ, மற்றும் அரண்யத்தில் ஶ்ரத்தையுடன் ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர் எவரோ, எல்லோரும் அர்ச்சிராதிமார்க்கம் புகுகின்றனர்** என்று உள்ளதே என்றாலும், அது பொதுவாக எல்லாவற்றிற்கும் சொல்லப்பட்டது எனக் கொண்டால்,

உபகோஸல வித்யையில் ஏன் சொல்லப்பட்டது; அப்படிச் சொல்லப்பட்டது வீணாகும் என்பது பூர்வபக்ஷியின் வாதம்.

***ஸித்தாந்தமாக,*** பஞ்சாக்னிவித்யையிலுள்ள வாக்யத்தின் ஸ்வாரஸ்யத்தைப் பாதிக்கலாகாது. ஆகையால் எல்லோருக்கும் அதுவே மார்க்கம். ப்ரஹ்மவித்யையை புகழ்ந்து வரும் வேளையில் சொல்லவேண்டியிருந்ததால், உபகோஸலவித்யையில் இது சொல்லப் பட்டது. அதனால், அர்ச்சிராதிமார்க்கம் வேறு வித்யைக்கு இல்லை என ஆகாது. எனவே, இது இவருக்குத்தான் என வரையறுக்கப்படாததாய் எல்லோருக்குமாகும்.

மேலும், ஸ்ரீமத்பகவத்கீதையில் எம்பெருமானும்,

अग्निर्ज्योतिरहः शुक्लः षण्मासा उत्तरायणम् । तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥

***அக்னியாகிற ஜ்யோதி, பகல், ஶுக்லபக்ஷம், உத்தராயணம் ஆகிற ஆறுமாதங்கள் என்ற தேவதைகள் உள. அவர்கள் சேர்ந்த வழியில் சென்றவர்களான ஜ்ஞானிகளான நற்பிறவியுடையோர் பரப்ரஹ்மத்தைப் பெறுகின்றனர்*** என அருளியிருக்கிறான். எனவே, ஶ்ருதியும் ஸ்ம்ருதியும் பொதுவாகவேயிருப்பதால் அவற்றோடு முரண்படாதாம் என்றும் விளக்கப்பட்டது.

ஸ்வாமிதேஶிகன் அதிகரணஸாராவளியில் அருளிச்செய்த இந்த அதிகரணத்திற்கான மூன்று ஶ்லோகங்களின் கருத்தை மிகச் சுருக்கமாக அனுபவிக்கலாம். पन्थाः स स्यादर्चिरादिः ...... चिन्ता என்ற ஶ்லோகத்தில் ஏறத்தாழ நாம் மேலே அனுபவித்த விஷயமே ஸ்வாமியால் விவாதிக்கப்படுகிறது. हेयोपादेयमार्गद्वितयमुपदिशन् ...... मार्गचिन्ताविधानम् என்ற இரண்டாவது ஶ்லோகத்தில், கீதையில் பகவத்வாக்யத்தை நோக்குங்கால் அர்ச்சிராதிமார்கம், தேஹத்தின் முடிவில் கர்மங்களை விடுதல், விட்ட கர்மங்கள் ப்ரியாப்ரியர்களிடத்தில் செல்வது, விரஜையைத் தாண்டுதல் முதலியவைகள் சிந்திக்கப்பட வேண்டியது அவஶ்யம் என்கிற விஷயம் தெளிவுபடுத்தப்படுகின்றன. हानादेरर्चिरादेरपि ..... स्थानपाति என்ற மூன்றாவது ஶ்லோகத்தில், பாபபுண்யங்களை விடுதல், அர்ச்சிராதிமார்கம் ஆகியவை உபாஸன அங்கமானால், அவற்றை பின்பு வரக்கூடிய அங்கபாதத்தில் விவரிக்காமல், வித்யையின் குணங்களை விவாதிக்கும் குணோபஸம்ஹார பாதத்தில் சொல்லியது பொருத்தமற்ற (அஸங்கதம்) தன்றோ எனக் கேள்வி எழுப்புகிறார். பதிலாக, அங்கியான பலத்திற்கான அங்கங்களை இரண்டாக வகுத்து, ஒன்றை ஜ்ஞானாங்கமாகவும், மற்றதைத் கர்மாங்கமாகவும் அறியலாம். இங்கு, ஜ்ஞானாங்கமாக பாபபுண்யங்களை விடுதல், அர்ச்சிராதிமார்கம் இவைகள் த்யானிக்கப்படுவதால் இந்த பாதத்தில் சொல்லப்பட்டது பொருத்தமே எனத் தலைக் கட்டுகிறார். மேற்சொன்ன விஷயங்களை வல்லார் வாய்க் கேட்டறிதலே நலம்.

### அறிவுச் சுரங்கத்தில் அர்ச்சிராதிகதி

நாம் அனுபவித்த வேதாந்த தீபத்தின் ஒரு பாகமான அர்ச்சிராதிகதி நம் ஸ்வாமியால் பல க்ரந்தங்களைக் கொண்டு காலக்ஷேபம் ஸாதிக்கப்பட்டது. பொதுவாக ஸ்வாமி அவர் நிறுவிய வெப்ஸைட்டின் உதவிமூலம் பல்வேறு நிகழ்ச்சிகள், காலக்ஷேபங்கள் ஸாதிக்கிறார். ***வேதாந்ததீபத்திற்கு, எம்பெருமானா-ரின் மூலக்ரந்தம், அபிநவதேஶிக உத்தமூர் ஸ்ரீவீரராகவாசார்யரின் தீபப்ரபா, தேவையான உபநிஷத் விளக்கத்திற்கு ஸ்ரீரங்கராமானுஜமுனிஸ்வாமியின் விஷயவாக்யதீபிகா, ஸ்வாமிஸ்ரீதேஶிகனின் அதிகரண ஸாராவளி, அதற்கு வ்யாக்யானங்களாக ஸ்ரீகுமாரவரதாசார்யரின் சிந்தாமணி வ்யாக்யானமும் மற்றும் 34ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் பதயோஜனையும், நடாதூர் ஸ்ரீஸுந்தரராஜாசார்யரின் ஸஹ்ருய-ஹ்ருதயப்ரகாஶிகா, அபிநவதேஶிக உத்தமூர் ஸ்ரீவீரராகவாசார்யரின் ஸாரார்த்தரத்னப்ரபா, மேலும் 40ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸ்ரீபாஷ்யார்த்தமணிப்ரவாள தீபிகா, சொக்கனாவூர் நரஸிம்ஹா-***

சார்யரின் **ஸ்ரீபாஷ்யார்த்த தீபிகா,** 44**ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் பத்யமாலிகா,** என்னும் இத்தனை க்ரந்தங்களிலிருந்தும் விஷயங்களைச் சேகரித்துக் காலக்ஷேபம் ஸாதிப்பது ஒரு ஸாதனையாம். இவையனைத்தும் ஸ்வாமி ஒரு விரல் அசைவில் வைத்துக்கொண்டிருப்பது அவர் நிறுவனத்தின் ஸாதனை. அடியேன் இவ்வளவு விஷயங்களையும் க்ரஹிக்கும் ஸத்பாத்ரமாக இல்லாமல், ஸ்வாமி குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுவாய் காலக்ஷேபம் ஸாதிப்பது பற்றியுரைப்பது அவர் புகழுக்கு இழுக்காம்.

**அழிவில்லா அறிவுச்சுரங்கம்**

ஸ்வாமி ஆசார்யர்களின் **திருநாமங்களை** உச்சரிப்பதும், அவர்தம் கோஶங்களின் பெயர்களை உச்சரிப்பதற்குமே தனிப் புண்ணியபலன் உண்டென்பார். அதிக ஸம்ப்ரதாய ஜ்ஞானம் அமையப்பெறவில்லை என்று எண்ணுவாரும் ஸ்வாமியின் அறிவுச்சுரங்கத்தில், இடதுபுறத்தில் தோன்றும் ஆசார்யர்களின் திருநாமங்கள், அவர்தம் கோஶங்களின் பெயர்களை முறையாகப் படித்துத் தேறலாம்.

சீலமில்லா இச்சிறியேனிடம் ஆஜ்ஞையால் காயிககைங்கர்யம் செய்துகொண்ட நம் ஆசார்யரின் திருப்பாதங்களில் அனந்தகோடி ப்ரணாமங்களைச் சமர்ப்பித்து, இந்நிறுவனம் பல்லாயிரம் ஆண்டுகள் ஸம்ப்ரதாயப்பணியில் சிறந்து விளங்க திவ்யதம்பதிகள் ஆசார்யர்களின் திருப்பாதங்களை வேண்டி அமைகிறேன்.

**இராமானுசமுனி வண்மைபோற்றுஞ் சீர்மையன்**
**எங்கள் தூப்புல் பிள்ளைபாதம் என் சென்னியதே.**

*Sri S. Vasudevan is a first-generation entrepreneur, continuing his activities in several fields. By virtue of his forefathers, he had Sri E.B Rangarajachar (Poorvashrama tirunamam of present HH 46th Jeer of Sri Ahobila Mutt) as Purohitar of his family. With the blessings and guidelines of HH 45th Jeer of Sri Ahibila Mutt, he joined Kalakshepa Ghoshti of Sri U.Ve. Pazhaveri Rajagopalachariar, later continuing Kalakshepam under Sri U.Ve. Sohattur Ramanujachar. He is also a member in the kalakshepa goshti of Sri U.Ve. Tirunagai Viraraghavachar (Pattanna Swamy) and Sri U.Ve. Pazhaveri Lakshminarasimhachar (Balaji Swamy). He contributes articles to Vainavan Kural magazine regularly.*